JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 67/2024 |
| | : | Prosecution P.W - 8 |
| NAME | : | ஆதிநாராயணன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday of 26.11.2024

முதல் விசாரணை

நான் தற்போது TVMCH மருத்துமனையில் உதவி மருத்துவராக பணிபிரிந்து வருகிறேன். நான் 28.05.2018 ம் தேதி மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது எம்.காளிதாஸ் த/பெ.முருகன் என்பவருக்கு நுண்கதில் படங்கள் எடுக்கப்பட்டு எனது அறிக்கைக்காக சமர்பிக்கப்பட்டது. அந்த படங்களை ஆய்வு செய்து பார்த்து அந்த நபருக்கு வலது முழங்கையில் எலும்பு முறிவு இருந்ததை கண்டறிந்து அறிக்கை அளித்தேன். X–ray No. 4633ME நாள் 28.05.2015 ஆகும். மேற்படி அறிக்கையினை 5 வருடங்களுக்கு பிறகு அழித்தல் செய்துவிடுவோம் அவ்வாறு அழித்தல் செய்ததாற்கான துறைத்தலைவர் கடிதத்தையும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு உத்தரவையும் சமர்பிக்கிறேன். 25.11.2024 ம் தேதியிட்ட நுண்கதிர் துறைத்தலைவர் அளித்த கடிதம் அரசு உத்தரவு நகலுடன் அசா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் இது சம்மந்தமாக என்னை விசாரிசத்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

அசா.ஆ.4 காளிதாஸ் காயச்சான்றிழ் மேற்படி காளிதாஸ்க்கு வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாக துலங்குமா என்றால் துலங்கும். அசா.ஆ.4-ல் எந்த இடத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் அசா.ஆ 4 ல் பின்பக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றால் X-ray, Right Forearm, X-ray No. 4633ME date 28.05.2018, Report fracture right ulna என்று எழுதப்பட்டள்ளது. Fracture என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் Fracture-க்கான குறியீடு எழுதப்பட்டுள்ளது. மேற்சொன்ன குறியீடு Fracture என்பதை குறிக்காது என்றாலும் அது right ulna பகுதியில் X-ray எடுக்கப்பட்டதாகத்தான் துலங்கும் என்றால் சரியல்ல. மேற்சொன்ன X-ray நான் எடுக்கவில்லை என்றால் சரிதான், நான் எடுக்கவில்லை. அந்த X-ray Report-ஐ தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவோ காவல் துறையினரிடம் ஒப்படத்ததாகவோ துலங்காது என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு மேற்படி X-ray, Report மருத்துவமனையில்தான் பாதுகாப்பாக இருந்தது என்றால் சரிதான். காவல் துறையினார் இந்த வழக்கு சம்மந்தமாக எந்த வருடம் என்னை விசாரித்தார் என்றால் தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி X-ray எடுக்கும்போது கையை எப்படி வைத்து X-ray எடுத்தார் என்றால் கையை X-ray table மீது Resting Position-ல் வைத்து எடுக்கப்பட்டது. வலது கையில் ulna பகுதியில் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது தவறி கீழே விழும்போது கல், ஆணி பட்ட காரணத்தினலோ அல்லது கீழே விழுந்த காரணத்தினாலோ எலும்பு முறிவு ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் கீழே விழுந்தால் வாய்ப்பு உள்ளது, கல், ஆணி குத்துவதால் வாய்ப்பு இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi